திரு. கே. எ. வகாப் : இன்றையதினம் ஆந்திராவில் உள்ளவர்கள் கூலியை ஏற்றவில்லை அதனால் நாம் ஏற்றவில்லை, அத்துறை மத்திய அமைச்சர் ஆந்திராவைச் சேர்ந்தவர் என்று சொன்னார்கள். இந்தப் பீடித் தொழிலாளர்கள் வறுமை, நோய், மற்றும் பல்வேறு விதமான வேதனைகளுக்கு ஆட்பட்டிருக்கிறார்கள். இன்றைய விலைவாசியேற்றத்தின் அடிப்படையில் பீடி முதலாளிகளே கூலியை உயர்த்துவதை ஒத்துக்கொள்ளக் கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. ஆனால் இதில் அரசு சற்று தீவிர முயற்சி எடுத்துக் கொண்டால் அதில் வெற்றியடையலாம். ஆகவே, அந்த முயற்சியை இந்த அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் இது தொழிலாளர் நல அரசு என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

Training Institute for Transport Staff

* 642 *Q*.—THIRU N. DENNIS:
THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to start an Institute to train State Transport Staff in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) இந்தப் பொருள் அரசின் முதனிலை பரிசீலனையில் உள்ளது.

திரு. என். டென்னிஸ் : இது தொழில் சம்பந்தமாக மாத்திரமா? ஒழுக்க முறை அதாவது பணியாளர்கள் பொது மக்களுடன் தொடர்பு கொள்ளும் முறை குறித்து பாடமாகக் கற்றுக்கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : போக்குவரத்துக் கழகங்கள் மூலம் இருக்கிற உபரித் தொகையை வைத்து தமிழ் நாட்டில் ஒரு போக்குவரத்து இன்ஸ்டிட்யூட், ரோட் டிரான்ஸ்

1974 மார்ச் 27]

போர்ட் இன்ஸ்டிட்யூட் ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென்ற கருத்து அரசின் பரிசிலனையில் உள்ளது. அதன் மூலம் தகுந்த ட்ரைவர்களை உருவாக்குவது, கண்டக்டர்களுக்கு நல்லமுறையில் பயிற்சி தருவது, மெக்கானிக்குகளை உருவாக்குவது என்பனபோன்றவைகளில் திட்டமிட்டு—ஏனென்றால் இன்னும் பத்து இருபது ஆண்டுகளில் தமிழ்நாட்டிள்ளுள அத்தனை பெருந்துகளையும் நாமே கையகப்படுத்துவது என்று வரும்போது அதற்கான மான் பவர் ப்ளானிங், மனித சக்தி அளவை நிறைவு செய்கிற வகையில் இந்தத் திட்டத்தை அமல்படுத்தலாம் என்ற ஆலோசனை இருக்கிறது.

(முற்பகல் 10.00)

திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே, இந்தத் திட்டம் விரைவாக அமைக்கப்படுமா? எந்த இடத்தில் அமைக்கப்படும்? அதற்கு என்ன செலவாகும் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இந்த விவரங்கள் எல்லாம் இன்னும் முடிவு எடுக்கப்படாததால்தான் ஆரம்பநிலையில் இருக்கிறது என்று என் பதிலில் தெரிவித்தேன்.

திரு. ஏ. எம். இராஜா: தலைவரவர்களே, இந்தப் போக்குவரத்துத் துறை நாளடைவில் தமிழ்நாடு முழுவதும் நாட்டுடைமையாக்கப்படவிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாட்டுடைமையாக்கப்பட்ட பெருந்துகளுக்கு நிறைய உதிரி பாகங்கள் தேவைப்படும். இப்போது அதிகவிலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்தப் போக்குவரத்துத் துறையும், தொழிற்துறையும் இணைந்து இந்த உதிரி பாகங்களை உற்பத்தி செய்வதற்காக ஒரு பயிற்சியையும் அளிக்க இந்தத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இதிலே அடிப்படையான ஒரு வேறுபாடு உண்டு. ஒரு புறம் வேலையில்லாத் திண்டாட்டம் இருந்தாலும், இன்னொரு புறம் டிரைவர்கள்கூட போதுமான அளவுக்கு போக்குவரத்துத் துறையில் கிடைப்பது இல்லை. ஆகையால் இருக்கிறவர்களை நல்ல முறையில் பயிற்றுவித்து போக்குவரத்துத் துறையில் எவ்வளவுக் கெவ்வளவு பயன்படுத்திக்கொள்ள முடியுமோ அந்த அளவுக்கு ஆராய்ந்து அதற்கு ஏற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டு

மென்பதற்காகத்தான் இந்த பயிற்சிநிலையம் உருவாக்கப் பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் மெக்கானிக்ஸ் பற்றி குறிப்பிட்டார்கள் என்று கருதுகிறேன். போக்குவரத்துக் கழகங்கள் அத்தனைக்கும் சேர்த்து இன்ஜினியரிங் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் என்ற முறையில் உதிரி பாகங்களை உற்பத்தி செய்ய ஒரு நிறுவனம் ஆரம்பித்து இருக்கிறோம். அதிலே கொடுக்க வாய்ப்பு ஏற்படுமானால் அவற்றையும் பரிசீலிக்கலாம்.

டி.வி.எஸ். கம்பெனிக்கு இழப்பீட்டுத் தொகை

* 643 **வினா—**திரு. த. சோனையா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

மதுரை டி.வி.எஸ். போக்குவரத்தை நாட்டுடைமை ஆக்கியதில் டி.வி.எஸ்க்கு அரசு நஷ்ட ஈடாக கொடுத்தது, கொடுக்க வேண்டியது எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மதுரை சதர்ன் ரோட் வேஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தாருக்கு அரசு இழப் பீடாக ரூ. 91,55,057.25 வழங்கியுள்ளது ; அரசு எடுத்துக் கொண்ட எல்லா உடமைகள் தொடர்பாகவும் இந்நிறுவனத்தார் கோரிய இழப்பீட்டுத் தொகை தொடர்பாக, முழுமையாகவும் இறுதி யாகவும் கொடுத்துத் தீர்க்கும் வகையில் இத்தொகை வழங்கப் பட்டது.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, இந்த டி.வி.எஸ். நிறுவனத்திற்கு தமிழக சர்க்கார், அதை தேசிய மயமாக்கியபோது மொத்தமாகக் கொடுத்த தொகை எவ்வளவு ? இன்னும் நாம் கொடுக்க வேண்டிய தொகை இருக்கிறதா ? அதைக்கொடுக்கிற போது எந்த முறையில் கொடுக்கப்பட்டது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, டி.வி.எஸ். நிறுவனத்தைப் பொறுத்தவரையில் மொத்தம் கொடுக்க வேண்டிய தொகை 1 கோடியே 25 லட்சம் ரூபாய். அதில் நாம் கிராஜுவிடி அல்லது லயபிலிடி என்று பிடித்துக்கொண்டது 33 லட்சம் ரூபாய். ஆகவே, மொத்தம் தரப்படவேண்டியது ரூ. 91,55,057.25. ஏற்கனவே அது தரப்பட்டு விட்டது.